காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

2—7—72

★

உள்ளே......

கலைஞர் போற்றும் தலைவர்!
(கட்டுரை)

★

முள்ளை முள்ளால்...
(சிறுகதை)

★

எம். ஜி. ஆர். முழக்கம்!
(தர்மபுரி மாநாட்டுப் பேச்சு)

★

காப்பியம்
(இலக்கியக் கட்டுரை)

★

விலை 25 காசு

புதுக் கவிஞர் புலம்பல்...

(கவிஞர். பன்னீர்செல்வன், ஆத்தூர்.)

புலம்புகின்றேன், புலம்புகின்றேன் நாளும், நாளும்!
புத்துலக கவிஞரிடை நானும், நானும்!
புலம்புவதும் விளம்புவதும் எங்கள் வேலை!
போற்றுவதும், தூற்றுவதும் சான்றோர் வேலை!
உலவுகின்ற வண்டுகளின் பாட்டைத் தானே!
ஒப்பில்லா தேன்மலர்கள் கேட்டுச் சொக்கும்!
புலம்புகின்ற புதுக்கவிஞர் பாட்டைத் தானே
புத்துலகம் செவிமடுத்துக் கேட்டுச் சொக்கும்!

ஒப்பில்லா தமிழ்க்கவிஞர் நாட்டில் சில்லோர்!
ஒழிவில்லா புதுக்கவிஞர் நாட்டில் பல்லோர்!
செப்புவதை. தீட்டுவதை கவிதை யாக்கி
சிறப்புற்ற சிலவிதழில் வரவே கண்டோம்
இப்புவியில் நாங்களுற்ற மகிழ்வைப் போல
எவ்வுயிரும், எப்போதும் பெற்ற தில்லை!
தப்புதனை, தவறுதனை கவிதை கண்டோம்
தண்டமிழா! செவிமடுத்துப் பொறுப்பன் நன்றி.

பாப்புனையும் வெறியாலே கவிஞர் ஆனேம்!
பைந்தமிழின் சுவையாலே கவிஞர் ஆனேம்!
காப்புதனை கையகத்தே பெற்று விட்ட
கன்னிகளின் கதையாலே கவிஞர் ஆனேம்!
காப்பாற்ற முடியாத காதல் வாழ்வை
கணக்கற்றோர் பெற்றமையால் கவிஞர் ஆனேம்!
சாப்பாடே இல்லாத நிலையில் நாங்கள்
சரித்திரத்து விதியிலே கவிஞர் ஆனேம்.

செம்பரம்பாக்கத்தில் டாக்டர் கலைஞரின் சிறப்புமிக்க பேச்சு :

வருங்கால வளத்திற்காக

இன்றைய சமுதாயத்தையே வாட்டி வருத்தலாகாது!

கழக அரசின் செயல்பாணி குறித்து டாக்டர் கலைஞர்!

வருங்காலத்தில் வளம் பெருகவேண்டும் என்பதற்காக இன்றைய சமுதாயத்தை வாட்டி வதைப்பபது சரியல்ல. இன்று வாழ்கின்ற மக்களும் நன்முறையில் வாழ்கின்ற இடைக்காலத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திட வேண்டும். இதுவே கழக அரசின் செயல்பாணி, என்பதை செம்பரம்பாக்கம் ஏரிச் சிரமைப்புத் திட்டத்தைத் தொடங்கிவைத்த முதல்வர் டாக்டர் கலைஞர் விளக்கிப் பேசினர்.

டாக்டர் கலைஞர்

முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியதாவது :—

இன்று மிகவும் சீரோடும் சிறப்போடும் நடைபெறும் செம்பரம்பாக்கம் ஏரி சிரமைப்புத் திட்டத் துவக்க விழா, மிகவும் மகிழ்ச்சி குலுங்கிடத் தக்க வகையில் நடைபெறுகின்றது என்பது விழாவில் அளிக்கப்பட்ட வரவேற்பிலிருந்தும், இங்கு கூடியுள்ள மக்களது ஆர்வத்திலிருந்தும் வெளிப்படுகிறது.

ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும் இந்தச் செம்பரம்பாக்கம் ஏரிச் சீரமைப்புத் திட்டத்தால் இப்பகுதியில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரும் பயன் விளையும்.

இந்த ஏரிக்கரையை உயர்த்தி உறுதியாக்கப்பட்டு, தூர் வாரி ஆழப்படுத்தப்படும். கலங்கல்கள் சீரமைக்கப்படும் கால்வாய்களில் சிமெண்டு காங்கிரிட் போடப்படும் இதன் மூலம் பத்தாயிரம் ஏக்கர் நிலத்திற்கு நிச்சயமற்றிருந்த பாசன வசதி நிச்சயமாக உறுதி செய்யப்படும். இதோடு மேலும் புதிதாக 2,500 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும்.

இச்சிரமைப்புத் திட்டத்தின் பலனாக, ஆண்டுதோறும் 7,500 டன் கூடுதலாக உணவு தானியம் உற்பத்தியாகும்.

சுற்றுலா வசதி

விவசாயிகளுக்கு ஏற்படும் பெரும் பயனுடன் இந்தச் செம்பரம்பாக்கம் ஏரிப் பகுதி சிறந்த சுற்றுலா கேந்திரமாகவும் மேம்பாடு செய்யப்படும். பூங்காக்கள் விளையாட்டு வசதிகளுடன் ஏரியில் உல்லாசப் படகு விடும் திட்டமும் நிறைவேற்றப்பட விருக்கிறது.

தூய்மையான ஜன்மம்

இவ்விழாவில் வரவேற்றுப் பேசிய சட்ட மன்ற உறுப்பினர் கோபால் அவர்கள் போன ஜன்மத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

முன்னொரு காலத்தில் இந்த செம்பரம்பாக்கம் ஏரியைக் கட்டிய மன்னனாக இருந்த நான். இப்போது மீண்டும் மறுபிறவி எடுத்து இந்த ஏரியைச் சீரமைப்பு செய்வதாகப் புகழ்ந்தார்

போன ஜன்மம் — மறு பிறவிகளை நம்பாதவன் நான். சாஸ்திரமே இப்படிப்பட்ட ஜன்மங்களைப் பற்றி முரண்பட்ட கருத்துக்களைக் கூறுகின்றது.

இந்த ஜன்மத்தில் புண்ணியம் செய்தால் சொர்க்கத்திற்குப் போகலாம். பாவம் செய்தால் நரகம் கிடைக்கும் என்று கூறும் அதே சாஸ்திரப்படி. ஆண்டு தோறும் நமது முதாதையருக்கு திவசம் நடத்தி புரோகிதருக்கு தானம் கொடுத்தால், நமது முன்னோரது ஆத்மா சாந்தி அடையும் என்றும் கூறுகிறது. எனவே இதனை நம்பத் தேவையில்லை. இப்போது வாழும் ஜன்மத்தை தூய்மையானதாக நடத்தினுல் போதும் என்பதுதான் எனது கருத்தாகும்.

எடுத்திருக்கும் ஜன்மக் கவலை

முன்பு எடுத்த ஜன்மம் அல்லது அடுத்து எடுக்கப்போகும் ஜன்மத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. நமது கவலையெல்லாம் நாம் இப்போது எடுத்திருக்கும் ஜன்மத்தை நல்லபடி நடத்துவது பற்றித்தான் கவலைப்பட்டுக் கவனம் செலுத்தவேண்டும்.

இந்த ஜன்மத்தில் சிலர் பணக்காரர்களாகவும், பலர் ஏழைகளாகவும் இருக்கின்றனர் பலரது உழைப்பை உறிஞ்சிக் கொழுப்பவர்களாகச் சில ஜன்மங்கள் வாழும் முறை இருக்கிறது. இதையெல்லாம் மாற்றி எல்லா ஜன்மங்களும் மனித ஜன்மங்களே! இதில் ஏற்றத் தாழ்வு இல்லை. அனைவரும் சரிநிகர் சமானமாக, சமத்து வாழ்வு வாழவேண்டும். இதற்காகப் பாடுபட வேண்டும் என்பது தான் நமது கவலையும் கவனமுமாக இருந்து வருகின்றது.

காஞ்சி

(கிழமை இதழ்)

ஆண்டுசந்தா ரூ. 16 ஆறுமாதம் ரூ. 8-00

மலர் 8 | 2—7—72 | இதழ் 5

திட்டத்தின் அடிப்படை

இந்த ஜன்மத்தில் எல்லோரும் ஏற்றத் தாழ்வற்று இன்புற்று வாழ்வதற்கான இலட்சியப் பாதையில்தான் நமது கழக அரசு பீடு நடைபோட்டு வருகின்றது.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் அமைப்பு குறித்து டெல்லியில் முதல்வர்கள் மாநாடு நடைபெற்றது. அதில் பேசும்போது இதைத்தான் வலியுறுத்திப் பேசினேன்.

இருபதாண்டுகள் கழித்து நமது சமுதாயம் எல்லா வளமும் பெற்று வாழ்வதற்கான திட்டங்களைத் தீட்டுவது நல்லதுதான். அதற்காக இந்த ஜன்மத்தில் — இப்போது வாழும் தலைமுறை முழு அளவுக்குத் தியாகம் செய்து விடுவதற்கு இல்லை, வருங்கால சமுதாயத்திற்கு வாழ்வளிக்கும் செயலில் ஈடுபடும் இதே நேரத்தில், இன்றைய சமுதாயம் வாழ்வதற்கான இடைக் கால திட்டங்களையும் ஒன்று சேரச் செய்தாக வேண்டும் என்றும் முதல்வர்கள் மாநாட்டில் எடுத்துக் காட்டினேன்.

நல்வாழ்வுப் பணிகள்

வருங்கால சமுதாயத்தையும் இன்றைய சமுதாயத்தையும் வாழ்விக்கும் திட்டங்கள் பலவற்றை பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கியுள்ள தி. மு. கழக அரசு செயல்படுத்தி வருகின்றது.

இந்த அடிப்படையில்தான் பல்லாண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த மதுராந்தகம் ஏரியைச் செப்பனிட்டோம்; இப்போது செம்பரம்பாக்கம் ஏரியைச் செம்மைப்படுத்த முனைந்துள்ளோம்.

இப்படிப்பட்ட பல்வேறு நல்வாழ்வுப் பணிகளைச் செயல்படுத்தி வருவதால்தான் நாம் மக்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருக்கிறோம். எங்களது அதிகாரம், அந்தஸ்துகளுக்காக மக்கள் எங்களை மதிக்கவில்லை — வரவேற்று வாழ்த்திடவும் இல்லை. மக்களது இதயத்தை அறிந்து, அவர்களது வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறோம். இதனால்தான் ஏழை எளியவர்கள் அனைவரும் எங்களை தங்களது வீட்டுப் பிள்ளைகளாகக் கருதி வாழ்த்தி வரவேற்கின்றனர். மலர் மாலைகளை அணிவித்து ஆரத் தழுவி மகிழ்கின்றனர்.

மக்களுடன் இரண்டறக் கலந்து வாழும் இந்த பந்தபாசம், சொந்தம், சுகிர்தம் எங்களுக்குள்ள சொத்து ஆகும். மக்கள் தரும் வாழ்த்துக்களினால்தான் உற்சாகத்தைப் பெற்று மேலும் தொண்டாற்றுவோம் என்று முதல்வர் டாக்டர் கலைஞர் உறுதியளித்தார்.

பூவிருந்தவல்லி குடிநீர்த் திட்டம்!

திட்டத்தின் பயன்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன் பூவிருந்தவல்லி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது; இதற்கான ரூ. 24.4 லட்சம் செலவிடப்படும். இதன் மூலம் 35 ஆயிரம் மக்களுக்கு தினசரி நபருக்கு 20 காலன் வீதம் நாளொன்றுக்கு மொத்தம் ஏழு லட்சம் காலன் குடிநீர் வழங்கப்படும்.

பணியின் ஒரு கட்டம்

பூவிருந்தவல்லி குடிநீர்த் திட்ட அடிக்கல்நாட்டு விழா 20-6-72 நகர பஞ்சாயந்து அலுவலகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் செ. கந்தப்பன் வரவேற்றுப் பேசினார்.

முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் தமிழ்நாடு அரசு மக்களுக்காக செய்துவரும் நல்வாழ்வுப் பணிகளில் இது முதல் கட்டம் என்றும், இதுபோல மேலும் பல திட்டங்கள் தொடரும் என்றும் அறிவித்தார்.

*

வாருங்கள் தோழர்களே!

கவிதைத் துறைக்கு நோபல் பரிசு பெற்ற உலக மகா கவிஞன் தாகூர் பிறந்த மண்ணிலே பரிசளிப்பு விழா!-பட்டமளிப்பு விழா!

இந்தத் தங்கத் தமிழகத்தில் தனி வரலாறு படைத்து நிற்கும், எங்கள் தமிழ்க் குலத்தின் ஏந்தல் —கலையுலகின் வேந்தன் — பொன் மனச் செம்மல்—புரட்சி நடிகர்— அண்ணனின் தம்பி — அருட் குணத்து நம்பி — மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் பரிசுபெறச் செல்கிறார்கள்.

"காணக் கண் கோடி வேண்டும்" என்று எதெதற்கோ எல்லாம் யார் யாரோ பாடினார்கள். ஆனால், கலைவேந்தன், நமது அண்ணன் விருது பெறும் கல்கத்தாத் திருவிழாவினைக் காணத்தான் கண் கோடி வேண்டும்.

ஒருகணம் நினைத்துப் பார்க்கிறேன்! கடலளந்த நெஞ்சத்தான் — கருணைத் தேவன்—வங்கக் கடலலையைப் புலம்பவிட்டு வாய்மூடி மோனத் துயில் கொள்ளும் முத்தமிழ் வித்தகன் பேரறிஞர் அண்ணா இன்று இருந்திருந்தால் ....!

"தம்பீ! சென்று வா! வென்று வா!!" என்று சிந்தை மணக்கும் செந்தமிழாலே வாய் நிறைந்த புன்னகையோடு தாய்மை கொண்ட நெஞ்சத்தோடு பாராட்டி வாழ்த்தி வழியனுப்பி வைப்பார்!

அண்ணனின் அரவணைப்பிலே— அன்பு வாழ்த்திலே தம்பியின் நெஞ்சம் பூரித்து விம்மும்! புளகாங்கிதம் அடையும்!

காணும் நமது கண்கள் ஆனந்தக் கண்ணீரின் அருவியிலே மீனும்! உள்ளம் தேனூறும்!! ஆனால் ....!

காலம் கொடிது! மிகக்கொடிது!! ஆமாம்! மிக மிகக் கொடிது!!

பாராட்ட அண்ணனும் இல்லை! பார்த்து மகிழக் கண்களும் இல்லை!

ஆனாலும் நாலரைக் கோடி தமிழர்களும் தாம் பெற்ற பேறாக எண்ணி வாழ்த்தி வழியனுப்புகிறார்கள். இதயத்தில் மலர்ந்த அன்பு மலர்களைத் தொடுத்து மாலை சூட்டி "மன்னவரே எங்கள் சின்னவரே சென்று வாருங்கள்! வென்று வாருங்கள்!!" என்று பாராட்டிப் — பண் பாடி — வழியனுப்பி வைக்கிறார்கள்!

பொறாமை கொண்டவர்கள் புழுங்குகிறார்கள்! உடலும் உள்ளமும் வேர்த்து நிற்கிறார்கள்! விண்ணளந்த புகழ் கொண்ட அண்ணன் மக்கள் திலகத்தின் உயர்வு கண்டு பொறுக்காத வறண்ட நெஞ்சினரின் வாய் முணுமுணுக்கிறது! பாவம்! அவர்கள்கொடுத்து

(14-ஆம் பக்கம் பார்க்க)

“தன்னிலை வரப்பெற்றோம்”

(இளங்கோதாசன்)

★

அந்திமயங்கும் மாலையில் கார்குழலாள் கன்னி யொருத்தியுடன்
ஆற்றங் கரையோரம் கையிணைத்துச் சென்றேன்!
மனதை மயக்கும் அந்த மாலைவேளைத் தென்றலில்
மனமதைப் பறிகொடுத்தேன் அக்கயல்விழிக் கன்னியிடம்!

பஞ்சுமெத்தையென அவள் மடியில் தலைவைத்துப்
பாவலன் போற்றும் பாட்டொன்று கேட்டேன்!
இசைத்ததுக் குயிலோவென ஐயமுற்றேன்
இன்பம் பெருக்கெடுத்தோடும் அவ்வேளையில்!

அல்லிமலர் போன்ற கயல்கண்ணியின் பூவுடலை
ஆசையுடன் வாரி எடுத்தணைத்தேன்!
இன்பத்தின் எல்லைக்கே என்னை இட்டுச் சென்று
ஈடிலலா அரவணைப்பிலே சொர்க்கத்தைத் தந்தாள்!

குமுதமலரென செங்கனி யிதழவள் திறந்து
அமுத மழையென ‘இச்’சொன்று தந்தாள்!
இன்னொன்று தருவாளோ? என்றேங்கிய எனக்கு
இடை யிடையே கிடைத்ததோ அவளதணைப்பு

பாலொளி பொழிந்த அப்பனிநிலவின் இரவில்
பாவையவள் உதிர்த்த சொற்களோ இனிமைதந்தது!
சில்லெனவீசிய அந்த இளந் தென்றலிலே
சிரித்தப் பாவையின் சிரிப்போ மின்னலென்றிருந்தது!

பூங்காற்றென வீசியத் தென்றல் புயலென வீசிப்
புதுமலரென அமர்ந்திருந்த அவளின் மேலாடையைச்
சரித்ததே!
பளிச்சிடும் அவளுடலின் மார்பகத்தைஇப்
பாரினில் நான்காண நேர்ந்ததே!

தனியொளி பரப்பிக் கொண்டிருந்தத் தனிநிலவினை
தாய் அணைக்கும் சேயென மறைத்ததேக் கருமேகக்
கூட்டமொன்று!
ஒளிமறைந்து இருள்சூழ்ந்த அந்த இரவில்தான்
நானும் அவளும் தன்னிலை வரப்பெற்றோம்!

★

கலைஞர் போற்றும் தலைவர்

(டாக்டர். ந. சஞ்சீவி)

கொத்தான மீசை

முத்தான பேச்சு

சத்தான கருத்து - எழுச்சிக்கு

வித்தான தமிழர்

வண்டாடும் சோலை

கண்டாடும் மயில் போலத் - தமிழ்

உண்டாடும் செல்வர்க்கு வணக்கம் - சிலம்புச்

செல்வர்க்கு வணக்கம்.

நான்காண்டுகட்கு முன்பு (16—9—1968) சிறுவர் அரங்கமாய் இருந்து இப்போது நம் முதல்வர் பெருந்தகையால் கலைவாணர் அரங்காய்த் திருப் பெயர் பெற்றுள்ள இடத்தில் திருவள்ளுவர் திரு நாளை ஒட்டி 'உடைமைகள் பத்து' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத் தலைமையுரையில் காணப் படும் முதல் வரிகள் - முதன்மையான வரிகள் இவை. இந்த வரிகளின் ஆசிரியர் யார் என்பது சொல்லாம லேயே விளங்கும். இந்த 'வணக்கம்' செய்த பின்பே கலைஞர் பெருந்தகை அந்நாள் அமைச்சர் முத்துசாமிக்கும் வணக்கம் தெரிவித்துள்ளார். இந்தக் கவிதைப் பட்டயத்தால் விளங்கும் முதல் பேருண்மை கட்சி — ஆட்சி இரு வேலிகளையும் கடந்து கண்டு சிலம்புச் செல்வர் புகழை சிலம்பும் சிந்தை இன்றைய முதல்வர்க்கு அன்றே இருந்திருக்கிறது என்பதாகும். ஆம். இக் கட்டுரையின் தலைப்பு சுட்டும் இரு பொருளும் கருதத் தக்கது.

இனி இந்த எட்டு வரிப் புகழில் கலைஞர் எவ்வாறு சிலம்புச் செல்வரின் சிறப்பைச் சித்தரிக்கிறார் என்பது சிந்திக்கத் தக்கது.

(1) கொத்தான மீசை (2) முத்தான பேச்சு (3) சத்தான கருத்து (4) எழுச்சிக்கு வித்தான தமிழர் இந்த நான்கு கருத்துக்களும் வாள்வீச்சுகள் போல - இல்லை - வாளனையக் காதல் கண் வீச்சுகள் போல - அடுத்தடுத்து ஒன்றன்மேல் ஒன்றாய் விளங்கு கின்றன. இந்த நான்கு கருத்துகளின் நல் வரிசை யையுமே உளவியல் திறனாய்வுக் கண்கொண்டு பார்த் தால் கலைஞரையும் கொள்ளை கொண்ட தலைவரை யும் - அவரையும் அனைவரையும் கவிதைக் கருத் தாற்றலால் கொள்ளைகொள்ளும் கலைஞரின் ஆற்றலை யும் காண முடிகிகிறது. உருவம் - உரை - உள்ளம் உடையோன் என்ற வரிசையில் கலைஞர் தலைவரின் ஆளுமைப் புகழைப் படிப்படியாய் ஏறி அளக்கும ஏற்பும் தோற்றம் சான்றதாய்த் துலங்குகிறது.

சிலம்புச் செல்வரின் உருவத்துக்கே உயிராக விளங்குவது —

கொத்தான மீசை

அந்த மீசையைக் 'கொத்தான மீசை' என்று கூறு வதிலும் முத்தான தமிழ்ச்சொல் வேறொன்று இருக்க இயலாது. மீசை மேல் இருக்கும் ஆசையெல்லாம் கொத்தாக அல்லவோ குழைகிறது?

இனி - முத்தான பேச்சு. ஆம். சிலம்புச் செல் வரின் மாணிக்கப் பேச்சுக்கு இந்த முத்தளித்த முத்தினும் வேறு முத்து (1) வேண்டுமோ?

அடுத்து முத்தான பேச்சுக்கு உயிர் ஒளி எது?

சத்தான கருத்து.

தலைவர் பேச்சு முத்தாய் ஒளிவீசக் காரணம் அதற்கு ஒளியூட்டும் சத்தான கருத்து என்பதை முத்தமிழ்க் கலைஞர் படியாதார்க்கும் படித்துக் கொடுக்கிறார்.

உருவம் - உரை - உள்ளம் இந்த மூன்றும் உடையார் - ஆம் - உடையார் (1) - யார்?

எழுச்சிக்கு வித்தான தமிழர்.

மீசையும் பேச்சும் - ஏன்? - கருத்தும்கூட எழுச்சி யின் எழுச்சியில்லாவிட்டால் ஏது பயன்பெறும்?

எழுச்சிக்கு வித்தான தமிழர்.

இன்னொரு முறை இந்த வரியைப் படியுங்கள். கலைஞரின் அரசியல் நுட்பத்தோடு கவிதை நுட்பம் கட்டிப் புரண்டு வெற்றிக்குப் போரிடுவதைக் காணலாம்.

சிலம்புச் செல்வர் எழுச்சிச்கு வித்தாம்! ஆம். எழுச்சியின் விளைவல்ல சிலம்புச் செல்வர் - அது பழங் கதை! அவரால் விளைவது எழுச்சி - இது புதுக்கதை! கலைஞர்தான் இந்தப் புதுக் கதையைத் தமது புதுக் கவிதையில் எவ்வளவு திட்ப நுட்பமாகத் தெரிவிக் கிறார்!

இப்படிச் சிலம்புச் செல்வர் புகழ்பாடும் இந்த

எட்டு வரிக் கவிதையில் முதல் நான்கு வரிகளின் பகுப்பாய்வு (Analytical) (பா)ராட்டு படைக்கும் பாவலர் கலைஞர் திடீரென அடுத்த மூன்று வரிகளில் ஆடும் தமிழ் ஆட்டம் அவர் ஆய்வு நிலையில் இருந்து தோய்வு நிலைக்குத் துடுமென திடுமென திரும்பும் திறம் காட்டுகிறது.

இதோ பாருங்கள் அந்த ஆட்டத்தை — கொள்கை ஆட்டம் இல்லாத் தமிழ்ப் பாட்டத்தை.

வண்டாடும் சோலை
கண்டாடும் மயில் போலத் - தமிழ்
உண்டாடும் செல்வர்

—அற்புதக் கவிதை ! இந்த வரிகளுக்கு உரை சொல்வது பாவம் ! கவிமணியும் ரசிகமணியும் இன்றிருந்தால் பாடிய பாவலனையும் பாவலனையும் பாட வைத்த நாவலனையும் கட்டித் தழுவிக் குற்றால அருவியில் குளிப்பாட்டி நாஞ்சில் நாட்டு நற்கனியெல்லாம் நாவார உண்ணக் கையாரக் கொடுத்திருப்பர் !

வண்டாடும் சோலை
கண்டாடும் மயில் போலத் - தமிழ்
உண்டாடும் செல்வர்

—அடேயப்பா ! - அதோ அவ்வை சண்முகத்தின் 'பலே ! பலே ! சபாஷ் ! சபாஷ் !' இமயத்தில் எதிரொலிக்கிறது !

கலைஞர் கவிதைகளில் செந்தமிழும் சிலம்புச் செல்வரும் பெற்ற சிறந்த பேருய்த் திகழும் இந்த



அழைப்புவிட்டாயோ?

(கவிஞர். கருமலைத் தமிழாழன்)

✶

மறைக்க முயலும் எண்ணம் மறந்து
முன்னும் பின்னும் முழுதும் திறந்து
விரைந்து செல்லும் விரைந்து செல்லும்
விரிந்த மலரே ! — தமிழில்
விளைந்த பண்பின்
முளையை கிள்ள
முனைந்து விட்டாயோ?
வெள்ளை மாவும் சிவப்பு சாந்தும்
அள்ளி அள்ளி முகத்தில் பூசி
துள்ளி ஓடும் துள்ளி ஓடும்
துடுக்கு மலரே ! — போலித்
துடுப்பு கொண்டு
கடலைக் கடக்க
துணிந்து விட்டாயோ ?
பாம்பு சடைகள் பாப்பாய் மாற்றி
பார்ப்போர்க் கெல்லாம் பல்லைக் காட்டி
பாய்ந்து செல்லும் பாய்ந்து செல்லும்
பாவை மலரே ! — பெண்மை
பாதை மாறி
பகட்டுக் கரத்தில்
பணிந்து விட்டாயோ?
இறுக்க மான உடையைப் போட்டு
குதிஉ யர்ந்த செருப்பை மாட்டி
சறுக்கி செல்லும் சறுக்கி செல்லும்
அழகு மலரே ! — பெண்ணின்
அடக்க ஒடுக்கம்
அடகு வைக்க
அழைப்பு விட்டாயோ ?

எட்டு வரிகளின் இறுதியில் இலங்கும் இரண்டு வரிகளில்தான் எவ்வளவு உறுதி ! - உருக்கம் !

...... செல்வர்க்கு வணக்கம் - சிலம்புச்
செல்வர்க்கு வணக்கம்.

முன் இரண்டு அடிகளையும் சேர்த்துப் படிப்போம் ; முழுமை இன்பம் - எழுமை இன்பம் எய்துவோம்.

வண்டாடும் சோலை
கண்டாடும் மயில் போலத் - தமிழ்
உண்டாடும் செல்வர்க்கு வணக்கம் - சிலம்புச்
செல்வர்க்கு வணக்கம்.

அரசன் அறிஞருக்குத் தரும் வணக்கம் ; கலைஞர் தலைவருக்குத் தரும் வணக்கம், கவிஞர் கடமையார்க்குத் தரும் வணக்கம் ; இளைஞர் முதியவருக்குத் தரும் வணக்கம் ; உயர்வு உயர்வுக்கு(!)த் தரும் வணக்கம். வாழ்க ! வெல்க !

✶

காப்பியம்

அரூர் வித்துவான்
தே. வே. சந்தானம்

கூவி எழுதுவதெல்லாம் காப்பியமானாலும் காப்பியம் என்பது திருத்தக்க தேவர், இளங்கோவடிகள், கம்பர், ஹோமர், இலியடு ஆடிசி, வர்ஜில் மில்டன், முதலிய கவியரசர்கள் எழுதியவைகள்தான் உலகில் புகழிடம் பெற்று சிறப்புடன் காலத்தால் அழிக்கப்படாமல் வாழ்ந்து வருகின்றன. உண்மைக் காவியங்களுக்கு அழிவில்லை. காப்பியங்கள் பல்வேறு சூழல்களில் உருவாகின்றன. பல இனத்தவர்கள் ஒன்று சேர்ந்து கலங்கி கலங்கி அமைதியடையும் போது இத்தகைய காப்பியங்கள் எழக் காண்கிறோம்.

தனி மனிதனின் வீறுவீரர்களின் சிறப்புஅப்பொழுது துலங்குகிறது; பலர்க்கு கேட்க இனிக்கிறது. தோல்வியுற்ற பொழுதும் இது தோன்றலாம். ஒரு நாட்டின் குரலொலியாக எழுவதோடு சிறுசிறு எல்லைப்புறத்தவரின் இன்னிசையாகவும் சிலபோது காப்பியம் எழும். தேசிங்குராஜன் கதை, பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் பாட்டு முதலியவை ஒருவன் கையால் காப்பிய நடையில் பயின்றவையே. தனிமனிதன் வீறுதான் காப்பிய காலத்தின் சிறப்பு. இவ்வீறு வீரமாகலாம். அறத்தின் உயர்நிலை ஆகலாம் கற்பின் திறமாகலாம். ஆனால் அங்கு எல்லோரும் ஒருநிலை, எல்லோரும் ஒரு நிறை என்பதில்லை.

பண்டைக் காலத்தில் ஓய்வாக இருந்தபொழுதெல்லாம் விருந்துண்டு அமர்ந்து அரசரும் வள்ளல்களும் காப்பியச் செய்யுள் கேட்டுக் களித்து மகிழ்ந்தனர். கதையே செய்யுளாக ஓடியபொழுது இன்னோசையாக நிலைபெற்று, மறக்க முடியாமற்படி மக்கள் மனத்தே ஊன்றி நின்றது. பொதுமக்கள் உள்ளத்தைக் கவர்ந்த கதை பொதுமக்கள் காப்பியங்களாகவும் வளர்ந்தன. இத்தகைய காப்பியங்களைப் பாராட்டுவதால் தமக்குப் புகழ்வரும் எனக் கருதிய அரசர்கள் அதில் ஈடுபட்டதும் உண்டு. அரண்மனையிலிருந்து குடிசைக்கும் குடிசையிலிருந்து அரண்மனைக்குமாகப் புரண்டு புரண்டு வளர்ந்தோங்கியது காப்பியம்.

காப்பியக் கதை என ஒன்று இருந்தால் மட்டும் போதாது. அதற்கோர் உருவம் கொடுத்து, உயிர் கொடுத்து அக்கதையில் மக்கள் சமூகத்திற்கேற்ப நிலையான பொருளையும் புகட்டி, 'வற்புறுத்துமொரு கவர்ச்சியையும் தந்து, அதனை நிலைநிறுத்துவதற்குக் காப்பியக் கவிஞன் வேண்டும். காப்பிபியம் என்பது ஒருவராக எழுதுவது அன்று; பலர் எழுதியவற்றைச் சேர்த்தே என்று கூறுவன எல்லாம் நம்பமுடியாத கட்டுக் கதைகள். ஹோமரின் இலியடு, வால்மீகியின் இராமாயணம், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் என்ற இவை ஒருவர் எழுதினது அல்ல. முன்னரே பலர் எழுதியவற்றை ஒருவர் ஒன்று சேர்த்து வைத்தவையே என்று கூறுவோர், இக் காப்பியங்களுள் ஒவ்வொன்றிலும் தனித்தனி விளங்கும் ஒற்றுமை சிறப்பினை உணராதவர்களேயாவர்.

காப்பியம் என்பது 'காவ்யம்' என்னும் வடசொல்லின் திரிபு என்பது இலக்கியங்களின் வாயிலாக அறிகிறோம். அதனைத் தமிழில் பொருட்டொடர். நிலைச் செய்யுள் கதைச் செய்யுள், அகலக் கவி, தொடர் நடைச் செய்யுள், விருத்தச் செய்யுள் எனப் பலப்படியாக வழங்குவர். தொல்காப்பிய உரையாசிரியர் உச்சிமேற்கொள் புலவர் நச்சினார்க் கினியர் என்பவர் சீவக சிந்தாமணி உரையில் அந்நூலைத் தொடர்நிலைச் செய்யுளென்றே கூறவேண்டுமென்றும், காப்பியம் என்று கூறுதல் தகாது என்றும் உரைத்தார். பெருங்கதையில் "காப்பியக் கோசமும்" என்று குறிப்பிடப்படுகிறது. சிலப்பதிகார அரும்பதவுரை ஆசிரியர் அந்நூலைக் காவியமென்றே கூறுகிறார். மேலும் 'இளங்கோவடிகள் தாம் சிறந்த இக்காவியம் செய்தார்" உரை நடையிட்ட பாட்டுடைச் செய்யுள் பாட்டும் உரையும் கலந்துவந்த காவியம் என்று குறிப்பிடுகிறார். "கோப்பிற் பொருளென காப்பியம் ஆகும்" என்று வீரசோழியம் குறிப்பிடுகின்றது. தண்டியலங்கார ஆசிரியர் காப்பியம் தொடர்நிலைச் செய்யுள் என்னும் இரண்டையும் ஒன்றன் பெயராகவே அமைத்துக் கூறுகிறார்.

காப்பியத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம் (1) பொருள் மட்டும் தொடர்ந்து கதை தழுவாது வரும் தொடர்நிலைச் செய்யுள் (2) பொருள் தொடர்ந்து கதை தழுவி வருவனவற்றுள் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கில் சிலவற்றையே பயனாக உடையன. (3) கதை தழுவி வருவதோடு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் கூறுவன. மேற்கூறியவற்றில் முதல் வகையில் பத்துப் பாட்டும், பொருள் தொடர்புடைய பிரபந்தங்களும் அடங்கும். இரண்டாவது வகையில் மணிமேகலை, நீலகேசி, பெரியபுராணம், வேறு புராணங்கள் முதலியன அடங்கும்! மூன்றும் வகையில் பெருங்காப்பியங்களும் நாடகக் காப்பியங்களும் அடங்கும்.

காப்பியத்திற்கு இலக்கணம் கூறுவது எளிதன்று. வால்மீகி, கம்பன், இளங்கோவடிகள், ஹோமர், மில்டன், வர்ஜில், தாசோ, காமியான் என்ற இவர்கள் எழுதியிருப்பன போன்றதே காப்பியம் என்று கூறுவதற்கு மேல் என்ன கூறமுடியும்? வாழ்க்கையின் பொருள் இன்னது என்று சொல்லிக் காட்டுவதன்று காப்பியம். அப்பொருளாழத்தோடு விளங்கும் வாழ்க்கையே கதையாக உருப்பெற்று புத்துயிரோடு புகுந்து உலவுகிறது. அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றின் பொருளாழமாகக் காப்பியத்தை திரண்டு உருண்டு எழவேண்டுமென்பது காப்பியக் கொள்கையாகும்.

முன்னோர் மனத்தில் மகிழ்ந்து மலர்ந்து வீசும் இவை பிற்காலத்து மக்களுக்குப் பழையன வாய்ப் போவதில்லை. பின்வருபவையும் முன்வந்தவற்றின் புதுமணமாகவே பொலிகின்றன. இதனால் காப்பியத்தின் கதை நடந்தது போலச் செல்கின்றது. வாழ்க்கை அனுபவத்திற்கு அடிப்படை மாறி விடுவதில்லை மனிதப் பண்பிற்கு மாறான வகையில் காப்பியம் நடைபெறுவதில்லை. மனிதப் போக்கினையும் தூயதாக்கிச் சூழ்நிலைகளையும் வேண்டிய அளவில் திருத்திப் பொருத்திக் கதையை நடத்துவது காப்பிய புலவனுக்கே இயல்வதொன்றாகும்.

தண்டியலங்காரத்திலும் வெண்பாப் பாட்டியலிலும் கூறப்பட்டுள்ள காப்பிய இலக்கணம் வருமாறு:- பொருள் தொடர் நிலைச்

செய்யுள் பெருங்காப்பியம், சிறு காப்பியம் வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், வரும்பொருளுரைத்தல் என்னும் இவற்றுள் ஏற்பவற்றை முன்னே கொண்டு அறம், பொருள், இன்பம் வீடு என்னும் நான்கினையும் பயக்கும் நடையதாய், நிகரற்ற தலைவனை யுடையதாய் மலை, கடல், நாடு, நகர அறுவகைப்பருவம், இருசுடர் தோற்றம் ஆகிய இன்னோரன்ன புனைவுகொண்டு மணவிழா, முடி விழா, பொழில் விளையாட்டு, நீர் விளையாட்டு, மக்கட்பேறு, புலவி, கலவி ஆகிய அமைப்புக்களைக் கொண்டு இருக்க வேண்டும்.

மேலும் மந்திராலோசனை தூது விடுத்தல், பகைமேற் செல்லுதல், போர்புரிதல், வெற்றி பெறுதல், சந்தி பெறுதல் போன்றவை தொடரப்பட்டு சருக்கம், இலம்பகம், பரிச்சேதகம் என்பன போன்ற உட்பிரிவுடன் எண்வகைச் சுவையும் மெய்ப்பாடு இடையிடையே காணும்படி புலவராற் கூறப்படுவதாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் குறையாமல் வரும்; பிறபொருள் சில குறைந்துவரினும் குற்றமில்லை சிறு காப்பியம் அறம் முதலிய உறுதிப் பொருள்கள் நான்கையும் கூறாமல் சிலவற்றை மட்டும் கூறுவது. சிலப்பதிகாரம் மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி குண்டலகேசி என்னும் ஐம்பெருங்காப்பியம் என்றும், உதயணன் கதை, நீலகேசி, சூளாமணி, யசோதரா காவியம், நாக குமார காவியம் என்னும் ஐந்து சிறு காப்பியமென்றும் கூறப்படும்.

அறிவால் அமைந்த புலவர்கள் இயற்றும் நூல்கள் யாவற்றினும் தலைசிறந்தது காப்பியமேயாகும். அது நடையினாலும், பொருளினாலும், இன்பத்தையும் பயனால் உறுதிப்பொருளையும் பயப்பது போலப் பிறவகை நூல்கள் பயப்பதில்லை. காவியம் இன்பமொழியில் கருத்துக்களைச் சொல்கிறது. காவியத்தை மனைவியின் உரைக்கு இணையாகச் சொல்வர், கணவனுக்குத் தனது கருத்தை அறிவிக்கப்புகும் மனைவி மிக இனிய சொற்களால் மனங்கவரும் முறையில் மெல்ல, அறிவித்தலைப்போல காவியங்கள் உயர்ந்த சிறந்த நீதிகளைச் சொற்பொருள் நயங்களோடு மனங்கவரும் வண்ணம் புலப்படுத்துகின்றன. இதுவே மொழியின் சிறப்பும் அணிகளையும் புலப்படுத்துகின்றது. காவிய இலக்கணம் கூறும் நிலை வேதங்களோடு ஒப்பமதிப்பர் வடநூலார்.

வனப்பினைப்பற்றி கூறவந்த தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் 'பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர் நிலையதே வனப்பென்னும் பெயர்ப் பகுதி வகையான ஏற்படுவதென்பது என தொல்காப்பிய செய்யுளியல் உரையில் குறிப்பிடுகிறார்கள். வனப்பு—அழகு. இதனால் ஒரு மொழியின் வனப்புக்களை அம் மொழியிலுள்ள தொடர்நிலைச் செய்யுட்களாகிய காப்பியங்களினால் அறிந்து கொள்ளலாமென்பதும், காப்பியங்களைப்போல வனப்பினைப் பலப்படுத்துவதில் தலைமையுடையன பிற அல்ல என்றும் கொள்ளலாம்.

காப்பிய இலக்கணங்கள் பொருந்திய தமிழ்க் காப்பியங்களைப் படித்து பயன் பெறுதல் தமிழர்தம் கடனாகும்.

வாழ்க தமிழ் !

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

- ★ சூர்தாக்கள்
- ★ பெட்ஷீட் பாட்டம்கள்
- ★ லுங்கிகள்
- ★ சேலைகள்
- ★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் ...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை ! ஆதாயமான உழைப்பு !

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை - 8.

முள்ளை முள்ளால்...

(மு. வாணி)

சிறுகதை!

கொளுத்தும் வெயிலைக் கூடப் பொருட்படுத்தாமல் சாப்பாட்டுக் கூடையைத் தலையில் சுமந்தபடி நடந்துகொண்டிருந்தாள் பொன்னம்மா. காலில் அவள் அணிந்திருந்த பிய்ந்து போன பழைய செருப்புக்கள் கொதிக்கும் தார்ப் பாதையின் சூட்டிலிருந்து அவள் கால்களைக் காப்பாற்றின. அவள் இதயம் அந்தக் காலணிகளைத் தனக்கு வழங்கிய வக்கீல் வீட்டம்மாளை நன்றியுடன் நினைவு கூர்ந்தது. அவை முழுதாக பிய்ந்து போவதற்குள் வேறு ஒரு ஜதை புதிய செருப்புக்கள் வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது. ஆனால் அது முடிகிற காரியமா?

வீட்டிலே படுத்த படுக்கையாய்க் கிடக்கும் நோயாளிக் கணவனையும் அவனது வயது முதிர்ந்த தாயையும் நினைத்துக் கொண்டாள். செருப்பு வாங்க வேண்டும் என்ற எண்ணம் எங்கோ பறந்தது! "உ...ம்! வயிற்றைக் கழுவிக் கொள்ள இந்த வேலையாவது கிடைத்ததே! இல்லையென்றால் நம் பாடு திண்டாட்டந்தான்! என்று பெருமூச்சு விட்டாள். சீக்கிரம் வீடு திரும்பவேண்டும் என்ற கவலையால் நடையை எட்டிப் போட்டாள்.

ஏழ்மையிலே வாடி வதங்கிக் கிடந்தவள் என்றாலும், பொன்னம்மாவின் முகத்தில் எப்போதுமே ஓர் அலாதிக் 'களை' உண்டு. கொண்டையை அள்ளிச் செருகிக் கொண்டு, முகத்தில் தழையத் தழைய மஞ்சளைப் பூசி, காலணா அளவுள்ள குங்குமப் பொட்டை வைத்துக்கொண்டு அவள் வந்தால் அவள் முகத்தை எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்கலாமா என்று தோன்றும்! அப்படியொரு கவர்ச்சி!

பொன்னம்மா திருவல்லிக்கேணிப் பகுதியில் ஐந்து வருடங்களுக்கு மேலாக சாப்பாடு எடுத்து வருகிறாள். அவள் சாப்பாடு எடுக்கும் குடும்பங்கள் எல்லாம் நல்ல வசதியான குடும்பங்கள். முதல் தேதியானதும் பொன்னம்மாவின் கைக்கு ஒழுங்காய் காசு வந்துவிடும். அவளது குணத்துக்காக இரங்கி சிலர் பழைய துணி மணிகளையும் இலவசமாகக் கொடுப்பார்கள். சாப்பாட்டுப் பாத்திரங்களிலும் கணிசமான சாப்பாடு மிச்சமிருக்கும் அதைக் கொண்டு பகல் வேளையை ஓட்டிவிடுவாள்.

பொன்னம்மாவின் குடிசைக்குப் பக்கத்தில்தான் காத்தாயியின் குடிசையும் இருந்தது. அவள் கணவன் கருப்பண்ணன் கொலை கொள்ளை முதலிய அத்தனை 'கலை'களிலும் கைதேர்ந்தவன். வீட்டில் மூன்று மாதம் என்றால் சிறையில் ஆறு மாதம் இருப்பான். காத்தாயிக்கும் சாப்பாடு எடுக்கும் வேலை தான். ஆனால் வாய்க் கொழுப்பும் கைத்துடுக்கும் நிறைந்த அவளுக்குப் பொன்னம்மாவைப் போல அதிக வாடிக்கை கிடைக்கவில்லை. கிடைத்த ஒரு சில வீடுகளிலும் ஒழுங்காய் காசு கிடைப்பதே பெரிய பாடாகிவிடும். இதன் காரணமாய் பொன்னம்மாவின் மேல் காத்தாயிக்கு எப்போதுமே பொறாமை இருந்துவந்தது. அவளைக் கண்டாலே முகத்தை 'உம்' மென்று தூக்கிவைத்துக் கொள்வாள்.

ஆனால் பொன்னம்மா இதையெல்லாம் கருதுவதே இல்லை. தன்னை வெறுத்த அவளிடம் அன்பாகவே பழகினாள். காத்தாயி உள்ளத்தில் எழுந்த பொறாமைத் தீ மட்டும் வளர்ந்ததே தவிரக் குறையவில்லை. எப்படியாவது பொன்னம்மாவைச் சாப்பாட்டுக் கூடை எடுக்காமல் தடுத்துவிட வேண்டும் என்று அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.

பொன்னம்மாவின் கணவன் முத்தையன் நல்லவன்; ஆனால் ஏமாளி இல்லாவிட்டால் காத்தாயி பொன்னம்மாவைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாய்க் கிளப்பி விட்ட புரளியை நம்பிவிட்டிருப்பானா? சந்தேகம் அழிவின் வித்தல்லவா? விளைவு? பொன்னம்மா திடீரென்று தன் வேலையை விட வேண்டியதாகி விட்டது.

"என்ன வந்துவிட்டது இந்தப் பொன்னம்மாவுக்கு? ஏன் இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் கூடத் திடீரென்று நின்றுவிட்டாள்?" என்று அவள் சாப்பாடு எடுத்த வீடுகளில் எல்லாம் கவலைப் பட்டார்கள். காத்தாயி அவர்களிடமும் பொன்னம்மாவைப்பற்றி தூற்றிவிட்டாள்; அவர்களில் ஒரு சிலர் காத்தாயி கட்டிவிட்ட கதையிலும் உண்மை இருக்கும் என்று நம்பிவிட்டார்கள்.

காத்தாயிக்கு இப்போதுயோகம் அடித்தது. வேறு வழியில்லாமல் காத்தாயியைச் சாப்பாட்டுக் கூடை எடுக்கப் பலர் அமர்த்திக் கொண்டார்கள்; ஆனாலும் பொன்னம்மாவுக்குக் கிடைத்த இடத்தை அவளால் எட்டிப் பிடிக்க முடியவில்லை.

அன்று பகல் பனிரெண்டு மணியிருக்கும். பொன்னம்மாவின் பிழைப்பில் மண்ணைப் போட்டு விட்ட தன் சாமர்த்தியத்தை நினைத்து கனவுலகில் சஞ்சரித்தபடி தலையில் சாப்பாட்டுக் கூடையுடன் நடந்துகொண்டிருந்தாள் காத்தாயி. எதிரே வண்டிகள் வருமே என்ற நினைவுகூட இல்லாமல் போய்க்கொண்டிருந்த அவள் கால் இடறிக் கீழே விழ அப்போதுதான் திடீரென்று வந்த காரின் சக்கரங்கள் அவள் காலைப் பதம் பார்த்த பிறகே சுழல்வதை நிறுத்தின. 'ஐயோ, அம்மா!' என்று கதறியபடி விழுந்ததுதான் அவளுக்குத் தெரியும்.

அவளுக்குச் சுயநினைவு வந்த போது, கண்ணீரும் கம்பலையுமாய் தன் கட்டிலருகே பொன்னம்மா நின்றுகொண்டிருப்பதையும் தான் இருக்கும் இடம் மருத்துவ விடுதி என்பதையும் உணர்ந்தாள். அவளின் வலது காலில் முழங்கால் வரை துண்டிக்கப்பட்டு கட்டுப் போடப்பட்டிருந்தது. உடம்பெல்லாம் அங்குமிங்குமாய் சிராய்ப்புக்

கள் வேறு. இதுவரை மயக்க நிலையில் இருந்தபோது தெரியாதிருந்த வலியின் கொடுமை இப்போதுதான் தெரிந்தது.

காத்தாயிக்குச் சுயநினைவு திரும்பியதைக் கண்ணுற்ற பொன்னம்மா, அவள் அருகில் நெருங்கி "பார்த்துப் போகக் கூடாதா, அக்கா? இப்படிக் காலைப் படுத்திக் கொண்டாயே!" என்று அரற்றினாள்.

காத்தாயி அவள் கரங்களைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு அழுதாள். அவளின் உண்மையான அன்பை நினைத்து உள்ளம் உருகினாள் "பொன்னம்மா! இந்தப் பாவியைப் பார்க்கவா ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்தாய்? உன்னைப் பற்றி அநியாயமாய்ப் புரளியைக் கிளப்பிவிட்டு உன் பிழைப்பிலே மண்ணைப் போட நினைத்ததற்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டதம்மா! இந்தப் பாவியை மன்னித்துவிடு பொன்னம்மா!" என்று மனம் வருந்த உருகிச் சொன்னாள் திருந்திய காத்தாயி.

"நான் அதையெல்லாம் அப்போதே மறந்துவிட்டேன் அக்கா! நீ எதையும் நினைக்காதே! உன் உடம்பு தேறட்டும்" என்று ஆறுதலாகக் கூறினாள் பொன்னம்மா.

"பொறாமையினால் மூடிக் கிடந்த என் கண்களைத் திறக்கத்தான் இப்படியொரு விபத்து எனக்கு ஏற்பட்டிருக்கிறது. என் உடம்பு தேறி எழுந்தாலும் இனிமேல் என்னால் சாப்பாட்டுக் கூடை தூக்கமுடியாது. நீ இப்போது செய்யும் ஆப்பக் கடைத் தொழில்தான் எனக்கு லாயக்கு. அதனால் பழையபடி நீ சாப்பாட்டுக் கூடை எடுக்கணும். இந்த உதவி செய்வாயா, பொன்னம்மா?" என்று கேட்டுக்கொண்டாள் காத்தாயி.

"கட்டாயம் செய்வேன் அக்கா! ...ஆனால் என் வீட்டுக்காரர் சம்மதிப்பாரா என்றுதான் யோசனையாயிருக்கிறது." அதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். இந்தா இந்த பழச் சாற்றைக் குடி!" என்று அவள் வாயருகே டம்ளரைக் கொண்டு சென்றாள் பொன்னம்மா.

"முள்ளை முள்ளால் தானே எடுக்க முடியும்? நீ கவலைப்படாதே பொன்னம்மா! நானே அவரைச் சம்மதிக்கவைக்கிறேன், போதுமா? என்றாள் காத்தாயி.

திருட்டுக் குற்றம் ஒன்றுக்காக மூன்று மாத சிறைத் தண்டனை பெற்று அப்போதுதான் விடுதலையாகி வந்த கருப்பண்ணன், காத்தாயியின் நிலையைக் கேள்வியுற்று கதறியபடி ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்தான். "காத்தாயி! நான் ஒழுங்காயிருந்து சம்பாதிக்காததால்தானே, உனக்கு இந்தக் கதி ஏற்பட்டுவிட்டது. சத்தியமாய் சொல்றேன். இனிமேல் எந்தத் தப்புத் தண்டாவுக்கும் போகமாட்டேன், காத்தாயி! இனிமேல் ஒழுங்காயிருப்பேன்." என்று கதறினான்.

தீமையிலும் நன்மை உண்டு என்பதுபோல் காத்தாயிக்கு ஏற்பட்ட அந்த விபத்தினால் அவள் திருந்தியது மட்டுமல்ல, 'கேடி' என்று அந்த வட்டாரத்தில் பெயர் பெற்ற அவள் கணவன் கருப்பண்ணனும் திருந்தி விட்டதில் கொள்ளை மகிழ்ச்சி பொன்னம்மாவுக்கு!

அந்த மகிழ்ச்சியைத் தன் கணவனோடு பகிர்ந்துகொள்ள தன் குடிசைக்குப் புறப்பட்டாள், காத்தாயியிடம் சொல்லிக்கொண்டு!

★

(12-ம் பக்கத் தொடர்ச்சி

மேல் என்னுடைய சிந்தனைச் சக்கரம் சுழலுமுன்......

சார் போஸ்ட். என்ற குரல் கேட்டு என் சிந்தனை ஓட்டத்திலிருந்து நின்று கவரைப் பெற்று அதன் உறையைப் பிரித்து உள்ளேயிருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தேன். என் கண்களும் இதயமும் ஒரு கணம் நின்றே இயங்கின: அதில்—

அன்புள்ள இளங்கோதாஸனுக்கு,

தங்களின் ஆருயிர்க் காதலி ஹேமலதா வரையும் மடல். நாம் இருவரும் கல்லூரியில் பயிலும்போது இதயங்களை நிலமாக்கி; எண்ணங்களை விதையாக்கி; கண்களின் சாந்தமான பார்வையை நீரோட்டமாகக் கொண்டு அன்பாகிய மலரைப் பயிராக்கினோம். அந்த அன்பு என்ற மலர் வெற்றி எனும் காயாகி திருமணம் எனும் கனியாகும் என்றுதான் நாமிருவரும் எதிர்பார்த்தோம். ஆனால் விதி நம்வாழ்க்கையில்விளையாடி விட்டது தாஸன். நான் எவ்வளவோ முயன்றும் என் பெற்றோர் எனக்கு திருமணத்தை நிச்சயப்படுத்தி விட்டார்கள் தாஸன். சி... நீயும் ஒரு பெண்ணா என்று நீங்கள் கேட்கலாம். நான் என் பிறந்த வீட்டை விட்டு ஓடி வந்து உங்களிடம் அடைக்கலம் புகலாம். ஆனால் இந்த உலகம் இருக்கிறதே அப்பப்பா...விரும்பிய ஒருவனை மணந்து வாழ அனுமதியளிக்காத சமுதாயமும் உலகமும் 'ஓடுகாலி' என்ற பட்டத்தை அளித்துவிடும். இந்த உலகமும் நாற்றமெடுத்த சமுதாயமும் எப்போது திருந்துகிறதோ அன்றுதான் நம்மைப் போன்ற எத்தனையோ இளங் காதலர்களின் வாழ்வு மலரும். தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள் தாஸன்.

இப்படிக்கு,

ஹேமலதா.

கடிதத்தைப் படித்த என் கண்களிலிருந்து என்னையறியாமலேயே கண்ணீர்த் திரையிட்டது. என் காதல் இப்படி ஆகும் என்று நான் என் கனவிலும் நினைக்கவேயில்லை. ஏன்? "காதலிக்கும் எல்லோருடைய காதலுமா நிறைவேறி விடுகிறது?" இறைவன் ஏன்தான் அன்பைப் படைத்தானோ? என்ற கேள்வி என் எண்ணச் சுழலில் சுழன்று சுழன்று வந்தாலும் இந்தக் கேள்விக்கு என்னால் விடை காண முடியவில்லை.

அப்போது என் உள்ளத்தில் மின்னலென கீழே காணும் அடிகள் தோன்றியது. அதுவும் என் அன்புக் காதலியாக இருந்த ஹேமலதா சொன்னதுதான். "ஒருவனை மனத்தில் வரித்துவிட்டால் பின்பு மாற்றானுக்கு இடம் தராத மரபு தமிழ் மரபு" மேலும் "அன்பால் ஒன்றிய உணர்வுகளால் திருமணம் செய்து கொள்ளுவதே தமிழ் மரபு" என்று சொன்ன அவளே வேறொருவனை மணக்கப் போகும்போது நான் ஏன் சாகவேண்டும். 'எனக்கென்று ஒருத்தி' இப்புவியில் எங்கேனுமோர் இடத்தில் பிறந்திருக்காமலா இருக்கப் போகிறாள். இதோ அவளைத் தேடி நானும் போகிறேன்......

★

எனக்கென்று ஒருத்தி...

எழில்சிந்தி புன்னகைபூக்கும் அவளுடைய மாநிறக் கன்னங்களும்; வானவில் போன்ற வளைந்த புருவங்களும்; மீனென அலைபாயும் கண்களும்; எட்பூ நாசியும்; முத்துச்சரம் போன்ற பற்களும்; பசுந்தளிரான இதழ்களும்; அவற்றில் பிறக்கும் முல்லைச் சிரிப்பும்; சங்குக் கழுத்தும்; அளவுடனும் எடுப்பாகவும் அமைந்த மார்பும்; சிற்றிடையும் ......! என்னுடைய மனத்திரையில் தோன்றி நாளுக்கு நாள் என்னைச் சித்ரவதை செய்துகொண்டிருந்தது. அவளோ தற்போது ஊரில் இல்லை. "மாலைக்காலத்தில் துணையைக் காணாது தனிமைத் துன்பத்தோடு கூடு திரும்பும் பறவை போன்று" ஒவ்வொரு நாளும் அவளைக் காணாமல் தனிமையில் வெந்து கொண்டிருந்தது என் கண்களிரண்டும். கண்கள் மட்டுமல்ல என் இதயம்கூட அப்படித்தான்.

நானும் அவளும் பழகிய; சந்தித்த அந்த இன்ப நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக என்னுடைய இதயக் கிண்ணத்திலிருந்து வழிந்தோடிய வண்ணமிருந்தது. அன்றொரு நாள்......!

கன்னியாகுமரிக் கடற்கரையில் அமர்ந்து இருவரும் நீலக்கடலில் எழுந்தெழுந்து அடங்கும் அலைகளை, இதயங்களில் எழும் இன்ப அலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம்...இல்லையில்லை ஹேமலதாதான் ரசித்துக்கொண்டிருந்தாள்.

அவளுடைய கண்களோ அலைபாயும் மீனென அலைந்துகொண்டிருக்க; கனிரசம் ததும்பும் அவளுடைய செவ்விதழ்களோத் துடித்துக் கொண்டிருக்க; அளவுடன் அமைந்து எடுப்பாக இருக்கும் அவளுடைய மார்பகமோ அவள் விடுகின்ற மூச்சால் கடற்காற்றோடு போட்டியிட முடியாமல் லேசாகவும், பதமாகவும் விம்மித் தாழ்ந்த வண்ணமிருந்தது. அவ்வாறு விம்மித் தாழும்போது அவளுடைய மார்பகத்தின் மீதிருந்த ஒற்றைச் சங்கிலி லேசாக அசைந்தாடிக் கொண்டிருந்தது. சில சமயங்களில் அந்த சங்கிலிமீது எனக்கு கோபமாகக்கூட இருந்தது. காரணம் நானும் அந்த சங்கிலிபோல இருந்திருந்தால் இந்நேரம் அவளுடைய......!

— இளங்கோதாசன் —

இப்படியாப்பட்ட தெய்வீக அழகைத்தான் நான் ரசித்துக் கொண்டிருந்தேன். "இதுவும் இன்ப அலைகளைத் தரக்கூடியது தானே" அன்று அவள் சொன்ன அந்த வார்த்தைகள் இன்றும் என் செவிப்பறையில் 'தேவகானம்' போல எதிரொலித்துக் கொண்டிருந்தது.

ஓ......அந்த வார்த்தைகளுக்குத்தான் எத்தனை கவர்ச்சி. அந்த வார்த்தைகள் பசுமை நிறைந்த அவள் இதழ்களினின்று பிறக்க நானும் அந்த வார்த்தைகளும் அதிர்ஷ்டம்தான் செய்திருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

அதை அந்தப் பருவக்குமரி; பூத்துக் குலுங்கும் சிங்காரச் சோலைபோல் பருவம் கொட்டிச் செழித்துக் கொண்டிருக்கும் தன் ஈரம் நிறைந்த உள்ளத்திலிருந்து கொணர்ந்து தன் பசுமைநிறைந்த இதழ்களினின்று உதிர்க்குமுன்... அப்பப்பா...அவள் செவ்விதழ்கள் குவிந்து மலர்ந்ததையும் மார்பகங்கள் விம்மி யடங்கியதையும்; அசைந்தாடும் பூவுடல் சிலிர்த்து வேர்த்து விட்டதையும் இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்!

அன்று அவள் சொன்ன அந்த வார்த்தைகளை மீண்டும் ஒரே ஒரு தரம் என் மனத்திரையில் ஓடச் செய்தேன். "தாஸன் மணந்தால் உங்களையே மணப்பேன். இல்லையென்றால் ஆர்ப்பரிக்கும் இந்தக் கடல் அலைகள்தான் எனக்கு ஓர் இடம் தர வேண்டும்" என்றாள் புன்னகையுடன். என் உள்ளத்தில் சுரந்த இன்ப உணர்வுகளால் உந்தப்பட்டு என் காதல் மலர்ந்த அந்த நிகழ்ச்சியை மீண்டும் மீண்டும் நினைத்தேன். என் பழைய எண்ணங்கள் என் உடலில் இனம் புரியாத இன்ப உணர்வலைகளை எழுப்பிக்கொண்டிருக்க; என் இதயக் கதவு சிறிது சிறிதாக திறக்க அங்கே—

அன்று வெள்ளிக்கிழமை

நான் என் கல்லூரி முதல்வரிடம் சென்றுவிட்டு உள்ளே யிருந்து வெளியே வருவதற்கும்; வெளியிலிருந்த ஹேமலதா உள்ளே செல்வதற்கும் சரியாக இருந்தது. அப்போதுதான் அந்த நிகழ்ச்சி நடந்தது. நான் என் பேண்ட் பாக்கெட்டிலிருந்து கர்ச்சிப்பை எடுக்கும்போது என்னுடைய பேனா கீழே அதுவும் ஹேமலதர்வின் காலடியில் விழுந்தது.

அதைக்கண்ட நானும் அவளும் ஒரே நேரத்தில் கீழேக் குனிந்தோம். ஆனால் பேனாவை எடுத்தது அவள்தான். பேனாவை அவள் என்னிடம் கொடுக்கும் போதும், அதை நான் வாங்கும்போதும் இருவரின் கண்களும் சந்தித்து மீண்டன. கண்கள் ஆயிரமாயிரம் எண்ணங்களைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டன. அவளின் ‘இன்பப் பார்வையில் அடங்கிக் கிடக்கும் அமுத எண்ணங்களை’ ஆராய்ந்து கொண்டிருந்தேன். இருவருடைய கைகளிரண்டும் உராய்ந்து இன்பத்தோடு கலந்த உணர்ச்சிகளைப் பறிமாறிக் கொண்டன. “கார் காலத்தில் வளம் பெற்றுப் பூத்திருக்கும் பூங்கொடி” போல இருந்த அவளுடைய அழகு என்னைக் கவர்ந்திழுத்ததில் வியப்பொன்றுமில்லை.

நீண்டு அலைபாய்ந்து நெளிநெளியாய்ப் புரண்ட கருங் கூந்தலை அள்ளிச் சொருகாமலும், சடையாக முறுக்கிக் கட்டித் துவள விடாமலும் உலரப் போட்டிருந்தாள். சில கழுத்தின் இருபுறமும் பிரிந்து தோளுக்கு அணியாய் புரண்டு கிடந்தன. அவளது முகமோ ஒளிவீசும் எழிற்பூவாகயிருக்க; விழிகளோ குறுகுறுக்கும் கருவண்டுகளாயிருக்க; அவள் நெற்றியோ புது நிலவின் வில் தோற்றம் போன்று காட்சியளித்தன. இதனால் இன்பப் போதையின் வெறி என் அங்கமெல்லாம் பரவி உடலின் ஒவ்வோர் அணுவிலும் புது வெள்ளம்போல் பாய்ந்தது.

என்னையறியாமலேயே ‘தேங்... யூ’ என்றேன். ‘நோ...மெ...என்று அவள் முடிக்கு முன் முதல்வரின் அறையிலிருந்து காலிங் பெல் அலறியதால் மயக்கத்திலிருந்து விடுபட்டு ‘துள்ளியோடும் புள்ளி மான்’ போல முதல்வரின் அறைக்குள் சென்றுவிட்டாள் ஹேமலதா. நானோ கள்ளுண்டவன் போல சென்றேன். “முதல் பார்வையிலேயே சில உள்ளங்கள் ஒட்டிக் கொள்கின்றன” இந்த நிலைதான் எனக்கும் அவளுக்கும். அன்பு என்ற மலரும் மலர்ந்தது.

நாட்கள் என்ற மொட்டுக்கள்; மாதம் என்ற மலர்களாக மலர்ந்தன.

அதற்குப்பிறகு அடிக்கடி நாங்களிருவரும் கல்லூரியிலும், பூங்காவிலும் சந்தித்து அன்பில் பிறந்த எண்ணங்களைப் பறிமாறிக்கொண்டோம். கற்பனை வானில் சிறகடித்துப் பறந்தோம். கடைசியாக அவள் ஊருக்குச் செல்லுமுன் இருவரும் கடற்கரையில் சந்தித்தோம். மயக்கம் தரும் மாலை வேளையில் எம்மிருவரையும் தென்றல் தழுவிச் சென்றது. இதற்கு மெருகூட்டுவது போன்று ஹேமலதா சூடியிருந்த மல்லிகைப் பூவின் நறுமணம் என்னை சொர்க்கத்தை நோக்கிச் சுண்டி இழுக்க; சந்தனச் சந்திரன் வேறு பொன்குடம்போல தலை நீட்டி மேலே எழுந்து கொண்டிருந்தான். அந்த ஒளி அவளின் பொன் மேனியில் பட்டு அவளே ஒரு தங்கச் சிலையென காட்சி தந்தாள். இளங்காதலர்களின் எம்மிருவரின் மனமும் மனக் கோட்டைக் கட்டிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு காதல் ஜோடிகளின் வாழ்விலும் நடைபெறும் நிகழ்ச்சி தானே இது. இதற்கு நானோ அவளோ என்ன விதிவிலக்கா!

வாழ்க்கை வசந்தமாகவும்; மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகளாகவும்; மணத்தையும் தேனையும் வாரி இறைக்கும் என்றுதான் ஒவ்வொரு காதலரும் நினைப்பார்கள். இது இயற்கையுங்கூட. அதே போலத்தான் நானும் அவளும் நினைத்தோம் ஆனால் ‘விதி’ எம் வாழ்க்கையில் புகுமென நினைக்கவேயில்லை.

விதியினால் இன்பம் பெறுபவர்களும் உண்டு. துன்பம் பெறுபவர்களும் உண்டு. மனித மனம் என்றுமே இன்பத்தைத்தான் நாடுமே தவிர ஒருக்காலும் துன்பத்தை நாடாது. ஆகவே எப்படியாயினும் இன்பத்தை (ஹேமலதா) அடைய என் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. திருமணம் என்ற பந்தத்தினால் அவளை......? அதற்கு

(10-ஆம் பக்கம் பார்க்க)

மாநிலத் தன்னாட்சி!

— மறவன் —

எத்தனை காலங்கள் இத்தரை மீதினில்
எத்திப் பிழைத்திடுவார் - நமை
நத்திக் கெடுத்திடுவார் - இனி
அத்தனை பேருமே ஒன்றெனக் கூடியே
மாநிலச் சட்டஞ்செய்வோம் - அதில்
மாண்புகழ் நாமடைவோம்!
அது - மாநிலத் தன்னாட்சி!
புகழ் - மேவிடும் பொன்னாட்சி!

பித்துப் பிடித்தவர் போலே உளறியேப்
பேயெனக் கத்துகிறார் - நமைப்
பிரிவினை நோயென்கிறார் - அவர்
தத்துப் பித்தெல்லாமே மாப்பொடி யாகிடத்
தானைத் தலைவரெலாம் - இவண்
கூடி விளக்குகிறார்!
அது - மாநிலத் தன்னாட்சி!
புகழ் - மேவிடும் பொன்னாட்சி

உள்ள அதிகாரம் போதாமலேயேதான்
மாநிலம் ஒவ்வொன்றுமே - தினம்
மாத்துயர் காணுதிங்கே - அதைக்
கிள்ளி யெறிந்திட, கேட்டினை நீக்கிட
துள்ளி எழுந்திடுவோம் - முழு
வெற்றியை ஈட்டிடுவோம்!
அது - மாநிலத் தன்னாட்சி!
புகழ் - மேவிடும் பொன்னாட்சி!

இந்திய நாட்டுடை சட்டங்கள் யாவுமே
கூடித் திருத்திடுவோம் - வரும்
கேடைத் தடுத்திடுவோம் - இனி
எந்த வழியிலும் தன்னுரிமைதனை
நாடி அடைந்திடுவோம் - பலன்
கோடி அடைந்திடுவோம்!
அது - மாநிலத் தன்னாட்சி!
புகழ் மேவிடும் பொன்னாட்சி!

குமுதங்கள்

— மதியண்ணல் —

தமிழகத்தில் குமுதம் என்ற வார ஏடு ஒன்று வெளிவருவதும் அதில் குருட்டுத்தனமான அரசியல் விமர்சனங்கள் வெளிவருவதும் புதுமையன்று. அஃது ஒரு வாடிக்கையான வேடிக்கை. வெளிவந்த மறுநாளே பழைய புத்தகக் கடைக்கு வந்துவிடக்கூடிய வளமான கருத்துக்களைக் கொண்டது. இந்த வாரம் குமுதம் என்ன குறும்பு செய்திருக்கிறது என்று பார்க்க ஆவலுடன் வாங்குவோர் பலர். சில நிமிடங்களில் படித்து முடித்துவிட்டால் அதனை மறுபடி கையில் தொடமாட்டார்கள். இதெல்லாம் குமுதத்தின் பாரம்பரியப் பெருமை.

ஒரு மலரின் பெயரான குமுதம் என்பதைத் தங்கள் ஏட்டிற்குப் பெயராய் வைத்திருப்போர் தன்மையிலும் அந்தமலருக்கு ஒப்பான மனப்பான்மை காட்டுவது நல்ல பெயர்ப் பொருத்தமாகும்.

இரவில் மலர்ந்து, நிலவில் பொலிந்து காலைப் போதில் கூம்பிடும் இயல்பு குமுதத்தின் இயற்கை, உதய சூரியனின் ஒளிக் கதிர்கள் குமுதத்திற்குப் பிடிப்பதில்லை. வாடிக் குவிந்து விடுகிறது. ஆனால் உதயக் கதிரவனின் ஒளி பட்டதும் மெல்ல இதழ் விரித்து முகம்மலர்ந்து சிரிக்கிறது தாமரை

தாமரைப் பெண்ணாள் தமிழ்ப் பெண்போற் கற்பிற் சிறந்தவள். தலைவனும் கதிரவன் தன் விரிகதிர் ஒளிகண்டால் மட்டுமே மலரும் தனற் கற்பினள். பகல் வந்தாலிம் பகலவன் வராவிடில் தண்ணொளி முகம் குவிந்து கிடப்பது தாமரைப் பெண்ணாளின் தமிழ்ப் பெண்மை.

நிலவின் காதலி நீலவண்ணக் குமுதம் அவன் தண்ணொளியால் ஒளிரும் வண்ணப் பெண்ணவள். ஆனால் அவன் வராத நாளிலும் விரிந்து மலர்ந்து விளங்குவள் என்றால் அவள் கற்பு எத்தகையது? வெட்கங் கெட்டவள், அவள் நிலவுக்குத் தலைவி இல்லை. இரவுக்குத் தலைவி. ஆம். இரவு ராணி. இப்படிப் புலவர்தம் கற்பனை பெருகிட உதவும் குமுதமலரின் பெயர்தான் எவ்வளவு பொருத்தமாய் ஓர் ஏட்டிற்கும் விளங்குவதைப்பாருங்கள்.

தமிழக மக்களின் இதய சூரியனை பேரறிஞர் அண்ணா அவர்கள் தோற்றுவித்த உதய சூரியனின் ஆட்சி இந்தக் காகிதக் குமுதத்திற்குப் பிடித்தமாயில்லை. ஆனால் தமிழ் மக்களின் நெஞ்சமென்னும் தாமரைகள் இந்த உதய சூரியனின் ஆட்சியில் உள்ளம் மலர்ந்து ஒளி வீசுகின்றன.

குமுதத்திற்கு அல்லது வேறு எந்த ஏட்டிற்கும் நமக்கு மாறான கருத்திருப்பது பற்றிக் கவலையில்லை. அது கொள்கை வேறுபாடு என்று கருதிடலாம். ஆனால் இந்த ஏடுகள் எல்லாம் நம்மீதுள்ள காழ்ப்பால் நம்மைக் காய்கின்றன.

அவர்தம் ஆதரவு இல்லாமலேயே வளர்ந்துவிட்டது குறித்து ஓர் எரிச்சல். கழகத்தை மாசுபடுத்திப் பேசி இழித்தும் பழித்தும் எழுதினாலும் மக்கள் புறக்கணிக்கிறார்களே என்ற மனக்குமுறல் ஏடுகளை வாங்கிப்படிக்கும் மக்களையும் ஏசிட ஆசை. ஆனால் விற்பனை போய் விடுமே என்ற ஏக்கம். வேறு வழியற்று, வகையற்று நம்மீது பாய்கிறார்கள்.

நாம் வளர்கிற காலத்திலேயே இந்த ஏடுகளின் போக்கினை உணர்ந்தே வளர்ந்திருப்பவர்கள். செய்தி வெளியிட்டால் எங்கே நாம் வளர்ந்து விடுவோமோ என்ற அச்சத்தில் நம்மைப் பற்றிச் செய்திகளையே வெளியிடாமல் புறக்கணித்தவர்கள். பதினைந்து இருபதாண்டுகட்கு முன்னாலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சினை கேட்க லட்சக்கணக்கான மக்கள் கூடும் நிலையிருந்தது. ஓர் ஊருக்கு அண்ணா வருகிறார் என்றால் சுற்று வட்டாரமெல்லாம் கடிதத் தோழர்கள் மூலம் செய்தி விளம்பரமாகும். அந்த வட்டாரத்து இளைஞர் கூட்டம் கால்நடையாகவும் மிதிவண்டி மூலமும் ஊர்திகள்மூலமும் வந்து அந்தஊரைத் திருவிழாக் கோலம் பூணச்செய்யும். அண்ணா அவர்கள் ஒன்றிரண்டு மணி நேரம் பேசுவார்கள். மறுநாள் செய்தித் தாளில் அந்தச் செய்தி முழுவதும் மறைக்கப்பட்டிருக்கும். நாலைந்து நாள் கழித்து ஒரு மூலையில் ''தி. மு. க. கூட்டம் நடந்தது. அண்ணாதுரைப் பேசினார்'' என்று மட்டும் செய்திவரும் அஃதும்இல்லாமல்போவதுமுண்டு.

அதனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தம் கழகத்திற்குப் பத்திரிகை உலகைப் புறக்கணித்து வளரும் வலிவை ஏற்றினார். தொண்டர்தம் உள்ளத்தில் பார்ப்பன ஏடுகளின் பாங்கினைப் புலப்படுத்திப் பக்குவமான வளர்ச்சிக்குப் பாதை காட்டினார். கழகச் சார்பில் ஏடுகள் தோன்றிட வாய்ப்புகளை வளர்த்தார்.

அந்த வளர்ச்சி 1967-ல் மிகப் பெரிய அரசியல் வெற்றியாய் விளைந்தபோது தமிழகத்து நாளேடுகளால் அந்த வெற்றியின் சிறப்பை விளங்கிக் கொள்ள முடியவில்லை. கழகத்தின் வெற்றி தற்காலிகமானது என்று நம்பினர். அதனால் 1971 தேர்தலில் தங்கள் முழு மூச்சான பிரச்சாரத்தால் கழகத்தை வீழ்த்திடக் கனவும் கண்டனர். தோற்றுத் துவண்டு போய்விட்டனர்.

தாங்கள் வெளியிடும் விபரீதச் செய்திகளால் நாட்டு மக்களின் மனம் மாறிவிடும் என்ற அவர்களின் போலித்தனமான நம்பிக்கை 1971 தேர்தலிலே தெளிவாக நொறுக்கப்பட்டு விட்டது என்பதை அவர்கள் நன்றாக உணர்ந்தே இருக்கிறார்கள். என்றாலும் ஆசை யாரை விட்டது?

மாநில சுயஆட்சிக் கோட்பாட்டில் நம்பிக்கையற்றவர்கள் அதனை எடுத்து விளக்கிக் கொண்டிருந்தால் இலட்சிய ரீதியாக இருக்கிறார்கள் என்று நினைக்கலாம். ஆனால் இந்த ஏடுகளோ மற்றவர்கள், இந்தப் பிரச்சினையைப் பேசிய காலங்களில் இந்த எதிர்ப்பைக் காட்டியதில்லை ஒன்று ஆதரித்து இருப்பார்கள் அல்லது மௌனம் சாதித்திருப்பார்கள்.

குமுதம் ஏடு மாநில சுயஆட்சியை ஆதரித்து எழுதிய காலமும் உண்டு. நாளும் குழப்பத்தில் மலிந்து கிடக்கும் அவர்கட்கு மறந்து போயிருக்கலாம். நாம் மறந்துவிடவில்லை.

நாம் தேர்தலில் ஈடுபடத் தொடங்கிய காலம். அப்போது பொதுவுடைமைக் கட்சி பிளவுபடாமல் இருந்தது. நாம் பிரிவினையைக் கைவிடாத வேளை, தேர்தலில் நம்முடன் மோதி பொது

வுடைமையர் படுதோல்வியுற்ற வேளை.

தேர்தல் முடிவுகளை விமர்சனம் செய்த குமுதம், பொதுவுடைமையர்கள் தி. மு. க. - வின் மீது காட்டிய பகையுணர்ச்சியைக் குறைத்துக்கொண்டு, போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கையையும் குறைத்துப் போட்டியிட்டிருந்தால் இவ்வளவு பெரிய தோல்வி அவர்களுக்கு வந்திராது — என்று எழுதியதுடன் நிற்கவில்லை.

அவர்களால் பாராட்டப் பெறும் ருசிய நாட்டில் எல்லா மாநிலங்களும் சுயஆட்சியுடன் விளங்குகின்றன. ஆகவே தி. மு. க. - வின் கொள்கை பொதுவுடைமையர்க்கு மாறானதில்லை என்றும் எழுதியது. நாம் இன்று பிரிவினையைக் கைவிட்டு விட்டோம். இந்தியாவின் மத்திய ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களுக்கு உரிமை வாழ்வு வேண்டுகிறோம். பிரிவினை வேண்டுமா வேண்டாமா என்று கட்டுரைப் போட்டி நடத்தத் தயங்காத காலம் போய் மாநில சுயஆட்சி என்றதும் மனம் பதறுகின்றனர் என்றால் அது வெறும் பதற்றமல்ல; பாவனை. அந்த பாவனை நமக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கே நன்கு விளங்கித்தான் இருக்கிறது.

அதனால்தான் தொழிலாளர் கிளர்ச்சி என்றாலும், ஆசிரியர் போராட்டம் என்றாலும் மக்கள் மன்றம் அமைதியாய் இருக்கிறது. 1971 தேர்தல் நேரத்தில் பார்த்தோமே கழகத்தை ஆதரிப்பதில் பொதுமக்கள் எவ்வளவு தெளிவாய் நின்றனர் என்பதை சிண்டி கேட்டுக் கூட்டணி நடத்திய கூட்டங்களில் போய் நின்று அவர்கள் பேசியதையும் ஏசியதையும் கேட்டிருந்து விட்டுப் பேசாமல் கழகத்தை ஆதரித்தனரே. ஏடுகளை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் தமிழக மக்கள் எந்த ஏடு எந்தக் கட்சியைச் சார்ந்தது? ஏன் இப்படிப் பேசுகிறது? எதற்காகத் தாக்குகிறது என்பதையெல்லாம் உணர்ந்தே இருக்கிறார்கள். அதனால்தான் தி.மு. கழகத்தை ஆளுங் கட்சியாக நீடிக்கச் செய்வதில் மற்றவர்கள் செய்யும் அதிர்வேட்டு எதிர்ப் பிரச்சாரங்களைப் புறக்கணித்து தொடர்ந்து ஆதரவு தருகின்றனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சாலும் எழுத்தாலும் அரசியல் நடைமுறைகளாலும் எண்ணங்களைப் பக்குவப்படுத்திக் கொண்டுள்ள இளைஞர் கூட்டம் தமிழகமெங்கும் பெருவாரியாக உள்ளது. அரசியலில் நேரடியாக ஈடுபாடு கொண்டிருக்கும் தி. மு. க. - வின் லட்சக் கணக்கான உறுப்பினர்கள் மட்டுமில்லை. அதைவிடப் பலமடங்கான எண்ணிக்கையுள்ள கூட்டம் கழகத்திற்குப் பின்னணியாக விளங்கி வருகிறது. அவர்கள் நேரடி அரசியலில் இல்லாமலிருக்கலாம். பல்வேறு துறைகளில் பல்வேறு பணிகளை ஆற்றிய வண்ணம் கழகத்தைக் கட்டிக் காக்கும் ஆர்வத் துடிப்புடன் துவங்குகின்றனர். இந்த நாட்டின் ஏழை எளிய பாட்டாளிக் கூட்டாளிகள் அனைவரும் தங்கள் வளமான எதிர்கால நல்வாழ்வை, ஆக்கமான முறையில் சிந்தித்து, தெளிவாகச் செயல்பட்டு வலிவுடன் தங்களுக்காகப் போராடவல்ல இயக்கம் தி. மு. க. ஒன்றுதான் என்பதை உணர்ந்திருப்பதால்தான் பல்வேறு உருவங்களில் வருகின்ற பகைமைக் குற்றச்சாட்டுக்களைத் தூக்கி எறிந்திடும் துணிவுடன் திகழ்கின்றனர். இப்படிப்பட்ட தேவையை அண்ணா அவர்கள் முன்னதாக உணர்ந்திருந்த காரணத்தால் எதிரியின் ஏச்சுக்களையும் ஏற்றத்திற்குப் பயன்படுத்தும் இதய வலிமையை வளர்த்தார்கள். அண்ணா அவர்கள் உருவாக்கி வைத்த இந்த அஞ்சாமையை அழித்திடும் தெம்பு யாருக்குமில்லை. தமிழகத்து வீதிகளில் மூலை முடுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தூவிச் சென்ற வித்துக்கள் இன்று பயிராய் வளர்ந்து வளமாய்ப் பொலிகின்றன எனவே பொழுதுபோக்கும் நேரத்தில் பொதுமக்களால் வாங்கிப் படிக்கப்படும் "குமுதங்கள்" குமுறுவதால் நமக்கு நட்டமில்லை. அவை மக்கள் தொடர்பைத் துண்டித்துக் கொள்ளத் துணிகின்றன என்றுதான் பொருள் அது நல்லதா என்பதை. அவர்கள் எண்ணிப் பார்க்கட்டும்

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தது அவ்வளவுதான்!

தமிழகத்துக்கே பெருமை சேர்க்கும் தனிப் பெரும் நாயகனை விருது பெறச் செல்லும் வேளையில், கரையுடைக்க அலைமோதி எழும் ஆனந்தத்தை அனுபவிக்க அருகதையற்றவர்களாக தங்களை ஆக்கிக்கொண்டார்களே கொடுத்து வைக்காதவர்கள்தரமே! அவர்களுக்கெல்லாம் நம் ஆழ்ந்த அனுதாபங்களைச் சொல்வதைத் தவிர வேறென்ன செய்ய இயலும்!

தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள், கூடி முடிவெடுத்த குழுவினரோடு தனித் தனியாக! ஏதாவது குறை காண முடியாதா? குற்றம் சுமத்த வாய்ப்பிருக்காதா? வசவு வாய்களுக்கு அவல் ஆகாதா? என்றெல்லாம் ஆலாய்ப் பறந்தனர்.

அரிப்பு! அத்தனை அரிப்பு!!

"கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?" என்று கவிவேந்தன் பாரதிதாசன் கேட்டான்! அதுபோல 'துக்ளக்' துரோகத்தால் எங்கள் தூயவனின் புகழ் குன்றுமோ? என்று நெஞ்சு நிமிர்ந்து கேட்கின்றோம்!

'வாழ்க வசவாளர்கள்!' என்று அண்ணனின்பாணியில் நாம் அவர்களை வாழ்த்தத்தானே வேண்டும்!

'இந்தகளியார் மடியில் விழுமோ' என்று ஏங்கி எதிர்பார்த்துக் கிடந்தேன்! அது என்மடியில்விழுந்தது. அதை எடுத்து நான் என் இதயத்திலே பத்திரமாக வைத்திருக்கிறேன்" என்று அன்று நம் அண்ணன், மக்கள் திலகத்தைப் பாராட்டிக் களித்தார்!

அந்தக் கனிதான் இன்னும் தொடர்ந்து அமிழ்துவிளை தீங்கனியாக அதியமான் ஔவைக்களித்த அருங் கனியாகத் தமிழகத்தின் நிரந்தர வாழ்வுக்காக இருக்கிறது

ஆம் நரை கெடுத்து சுவை பயக்கும் நல்ல கனியாக நலம்தருகிறது!

அன்று அதியமான் அவ்வையிடம் தந்தார்! இன்று நம் அண்ணன் அதே கனியை அவர் வழி நடத்திய ஆற்றல் சேர் தம்பி அக்டர் கலைஞரிடம் தந்து சென்றுள்ளார்!

இன்று அந்தக் கனிக்கு — கண்ணின்மணிக்குப் பரிசளிப்பு விழா! பட்டமளிப்பு விழா!! சென்று வருக! வென்று வருக! என்று சிந்தை மலர இருகரம் குவிய நின்று வாழ்த்தி வழியனுப்பி வைப்போம்! வாருங்கள் தோழர்களே! —கவிஞர் புலமைப்பித்தன்.

தர்மபுரி மாநாட்டில் எம்.ஜி.ஆர். சிறப்புப் பேச்சு :

தர்மபுரியில் கழகக் கொள்கை விளக்கம்!

வன்முறை கண்டு கழகம் பின்வாங்கிடாது!

கழகப் பொருளாளர் முழக்கம்!

"மாற்றார் கட்டவிழ்த்துவிடும் வன்முறைகளைக் கண்டு கழகம் தனது இயக்கப் பணிகளினின்றும் பின்வாங்கி விடாது. மாறாக முன்னிலும் தீவிரமாக கழகம் செயலாற்றத் தொடங்கும். வன்முறைகளால் கழகத்தை ஒடுக்கிவிட விரும்புபவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்" என்று முழங்கிய புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். மேலும் கூறியதாவது :

காமராசர் போன்றவர்கள் நம்மைப் பார்த்து என்ன சாதித்தீர்கள் என்று கேட்கிறார்கள். கழக அரசைக் கவிழ்த்து விடுவதாக மிரட்டுகிறார்கள்.

காமராசரின் இரட்டை நிலை

காமராசர் மேடையில் இப்படிப் பேசினாலும் நேரில் நம் தலைவர்களை சந்திக்கிறபோது பாராட்டவே செய்கிறார்.

கதர் வாரியம் பொருளாதார ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும் நவீன காலத்திற்கு உகந்ததல்ல என்று அண்ணா அவர்கள் எழுதியிருந்தாலும் நாம் கதர் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டு கதர் விற்பனையைப் பெருக்கி இருக்கிறோம். இதெல்லாம் காமராசருக்குத் தெரியாதா? தெரியும்!

இதற்காகவெல்லாம் நம்மை அவர் வெளிப்படையாகப் பாராட்டுவதானால் அப்புறம் எப்படி அவர் கட்சி எதிர்க் கட்சியாக இருப்பது? மனம் விட்டு நம்மை அவர் பாராட்டுவதென்றால் அவருக்கு ஒரு தனிக் கட்சிதான் எதற்கு?

திட்டமிட்ட சதி

சென்னையில், கொடியவர்களால் கொல்லப்பட்ட பிரதாப்சந்திரன் சடலத்தை நான் பார்த்தேன். அந்த 35 வயது இளைஞரை எங்கெல்லாம் தாக்கியிருக்கிறார்கள் என்று கவனித்தேன். தலையிலும் வலது கண் ஓரத்திலும் அடித்திருக்கிறார்கள். இடுப்பிலும் காலிலும் தாக்கியிருக்கிறார்கள். முதுகிலும் மார்பிலும் குத்தியிருக்கிறார்கள். அவர் உயிர் நிலையையே அறுத்திருக்கிறார்கள்.

முன்கூட்டியே திட்டமிடாமல் இந்தப் படுகொலையை எப்படிச் செய்திருக்க முடியும்.

தாங்க முடியாததால் தாக்குகின்றனர்!

தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையை தி.மு. கழகம் உருவாக்கிய பிறகுதான் கம்யூனிஸ்டுகளும், இந்திரா காங்கிரசும், காமராசர் காங்கிரசும் நம்மைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

கழகம் பேரவை கண்ட பிறகு— விவசாயிகளிடமும், மாணவர்களிடமும், தொழிலாளர்களிடமும் அவர்களுக்கிருந்த தொடர்புகளும் மரியாதையும் அற்றுப்போய்விட்டது.

அதனால்தான்—அதையெல்லாம் தாங்கமுடியாமல்தான்: வன்முறையாளர்கள் வாழ்வா சாவா என்கிற அளவுக்குத் துணிந்து இதுபோன்ற படுகொலையில் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள்.

கழகம் தொழிலாளர்களை விடுவதா அல்லது ஏற்றுக்கொள்வதா என்ற கடைசிக் கட்டத்தில் இப்போது நாம் இருக்கிறோம். அண்ணாவின் உத்தரவை நாம் அலட்சியப் படுத்தமாட்டோம். அரசியல்ரீதியாக, சட்டரீதியாக தொழிலாளர் பேரவையை நடத்தியே தீரும். அதை தி.மு கழகம் விடுவதாயில்லை.

போராட்டம் என்ற பெயரில் போர்—ஆட்டம் ஆட்டம் ஆட ஆரம்பித்திருக்கிறார்கள் வன்முறையாளர்கள். இந்த ஆட்டம் நீண்ட நாள் நீடிக்காது.

கழகத்தின் மேல் இந்த நாட்டு மக்கள் எந்த அளவுக்குப் பாசம் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு கடந்த பொதுத் தேர்தலே போதும். நாங்கள்தான் ஜெயிக்கப் போகிறோம் என்றார் காமராசர். கலைஞரின் உள்ளம் சாவுக்கு அஞ்சாத உள்ளம்—சட்டத்திற்கு பயப்படாத உள்ளம்—ரயில் முன்னால் படுக்கத் தயங்காத உள்ளம். அதனால்தான் இதுவரை ஜெயிக்க அவரால் முடியவில்லை. பாவம் காமராசர்.

தி. மு கழகம்தான் தமிழகம்

பழைய காங்கிரசுக்கும், இந்திரா காங்கிரசுக்கும், கல்யாணசுந்தரம் கம்பெனிக்கும் சொல்கிறேன் — தி. மு. கழகம் வேறு தமிழகம் வேறு என்று நினைக்காதீர்கள். தமிழகம்தான் தி. மு. கழகம்—தி. மு. கழகம்தான் தமிழகம்.

பிரதாப் சந்திரனின் துணைவியார் கதறி அழுததை அந்தக் கண்ணீரை என்னால் மறக்க முடியவில்லை.

தொழிலாளர்களின் தானைத் தளபதியாக இருந்த அந்த வாலிபனின் மனைவியார் கதறியபடியே என்னிடம் கேட்ட கேள்வி என்னைக் கதிகலங்கச் செய்துவிட்டது. முன்பு ஒருமுறை பிரதாப்சந்திரன் கைது செய்யப்பட்டபோது அவருடைய துணைவியார் என்னிடம்

வந்து முறையிட்டார்கள்; நீதி கிடைக்கும்; ஆபத்து வந்துவிடாது என்று சொன்னீர்களே; வந்து விட்டதே என்று கதறி அழுதார் கள். பிரதாப்சந்திரனின் மனைவி யார் தாலியிழந்த நிலை நாட்டில் இனியும் தொடரக்கூடாது.

அன்று என்னைச் சூழ்ந்து கொண்டு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் முறையிட்டார்கள். கலைஞர் தக்க நடவடிக்கை எடுப் பார்—கவலைப்படாதீர்கள் என்று சொன்னேன்.

அந்தக் கோரக் கொலை பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லாத காமராசர், ஒரு பத்திரிகை அலுவல கம் தாக்கப்பட்டதைப் பெரிதுபடுத்தி யிருக்கிறார். காங்கிரசாரால் முரசொலி அலுவலகம் தாக்கப்பட்டபோது— அங்கிருந்த அண்ணா படமெல்லாம் நொறுக்கப்பட்டபோது — அங்கே வேலை பார்த்த தோழர்கள் எல்லாம் தாக்கப்பட்டபோது அதைப்பற்றிப் பேசாமல் இருந்தார்களே, என்ன காரணம்?

அராஜகம் அகல...

வன்முறை வெறியர்களுக்கு கடைசிக்காலம் நெருங்கிக்கொண் டிருக்கிறது நடக்கின்ற அராஜகங் களே அதற்கு அத்தாட்சியாக அமைந்திருக்கின்றன.

பொதுமக்களாகிய நீங்கள் கழக அரசுக்குத் தொடர்ந்து நல்ல ஆதரவு தந்தால் அன்றி இது போன்ற அராஜகங்கள் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இவ்வாறு கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தமது உரையில் குறிப்பிட்டார்.

மாநில சுயாட்சி

திராவிட முன்னேற்றக் கழகத் தின் அடிப்படை இலட்சியமான மாநில சுயாட்சிபற்றிக் குறிப் பிட்ட புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். "மாநில சுயாட்சி என்பது நாம் இப்போதுதான் புதிதாக வலி யுறுத்தும் கோரிக்கையல்ல; அண்ணா அவர்களே எடுத்துக் கூறியதாகும். நாம் எதிர்க்கட்சி யாக இருந்த நேரத்திலேயே ஆளுங்கட்சியினரைப் பார்த்து 'டில்லிக்குக் காவடி தூக்குகிறீர் களே' எனக் கேட்டார் அண்ணா; அதன் பொருள் அங்கே போய் சாதிக்கின்ற அதிகாரம் இங்கே நம்மிடமே இருந்தால் என்ன என்பதுதான்" என்று விளக்க மளித்தார்.

தமிழகத்திற்காக, தமிழக மக்க ளுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டவும் அந்தந்த மாவட்டத்தில் மக்கள் குறைகளை அரசு அறியவும், அரசின் சாதனைகளை மக்கள் அறிய வுமே திராவிட முன்னேற்றக் கழகம் மாவட்ட மாநாடுகளை நடத்தி வருவதாக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். துவக்கத்தில் குறிப் பிட்டார். ஃ

மெல்லிய காதல்

"மெல்லிய காதல்" என் னும் தலைப்பில் புலவர் தி. நா. அறிவு ஒளி எழுதும் சமூகத் தொடர்கதை அடுத்த இதழ் (9-7-72)முதல் தொடர்ந்து வெளிவர இருக்கிறது. காதல், இளம் உள்ளங்களின் இன்ப வேதனைகள், வாழ்க்கைப் போராட்டங்கள், உள்ளத்து உணர்ச்சிகள், இவற்றின் குவியலிலே மெல்லிய காதல். சீரான நடையில் துடிப்பான முறையில் எழுதப்பட்டுள் ளது. இப்போதே உங்கள் இதழுக்கு முந்துங்கள்.



ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3, 86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.